**செ. கு. எண்**: 464 **நாள்**:28.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.12.2012

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலிருந்து பழனி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து 24.11.2012 அன்று காடம்பாறை மூன்றாவது கொண்டை ஊசி வளைவு அருகே, தடுப்பு சுவரின் மீது மோதி, மலையிலிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில், படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த திரு. அடைக்கலம் என்பவரின் மகன் ராமைய்யா சிகிச்சை பலனின்றி 22.12.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்த ராமைய்யா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராமையாவின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**